அன்பு
மயிலை இளைஞர் மன்றம்
திருமயிலாப்பூர் சென்னை.
"அறிவாலயம்"
சென்னை-18.

பிற்போக்குவாதிகள் கையில் சர்க்கார் சிக்கிக்கொண்டது

சுரண்டுவதற்கென்றே செய்யப்பட்டது இந்திய அரசியல் அமைப்பு

ஆக்கிரமிப்புவெறி ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்யத்துக்கே

முற்போக்குச் சக்திகள் சூழ்ச்சிகளை முறியடிக்கும்

—(0)—

மே தின விழாவில் வங்கக் கவிஞர் சட்டோபாத்யாயா முழக்கம்.

[ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்யத்தின் கூட்டுச் சதி தான் உலகப் போர் ஒன்றை மூட்டிவிட வேண்டுமென்று திட்டம் போட்டு வேலை செய்கின்றன; ரஷியாதான் ஆக்ரமிப்பு எண்ணங்கொண்டு அலைகிறதென்று அவர்கள் அஞ்சாமல் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்கள்; குழந்தை உள்ளம் படைத்த மக்களே நீங்களும் அதை நம்புகிறீர்கள்] என்று மேதினி எல்லாம் கொண்டாடப்படும் மேதினத்தன்று விழாக் கொண்டாட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை கானரான்ஸ்மித்நகரில் கூட்டப்பட்ட மாபெருங் கூட்டத்தில் வங்கம் தந்த புரட்சிக் கவிஞர் தோழர் ஹரீந்தரநாத்சட்டோபாத்யாயா கூறினார்.

இந்திய சர்க்கார் பிற்போக்கு வாதிகள் கையில் சிக்கிக் கொண்டுள்ளதென்றும், அரசியலமைப்பு ஏழைகளை முதலாளிகள் சுரண்டும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளதென்றும் அவர் ஆவேசத்தோடு கூறினார்.

சென்னை நகரில் மே தின விழா மற்றும் எட்டு இடங்களில் கொண்டாடப்பட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட கூட்டத்தில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்து கூடினார்கள்.

தலைமை தாங்கிய தோழர் சி. டி. டி. அரசு மே தின விழா தொழிலாளருக்குத்தந்த நன்மைகளை விளக்கினார். வங்கக் கவிஞரின் சிறப்புகள் சிலவற்றை அவர் விளக்கிக் கூறினார்.

கவிஞர் ஹரீந்திரநாத்சட்டோபாத்யா அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவை முடிவில் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் அழகாக வங்கக் கவிஞரின் உணர்ச்சி வெள்ளத்தையும் தன்னகத்தே கொண்டு தமிழில் மொழி பெயர்த்தார்.

கவிஞர் சட்டோபாத்யாயா ஆற்றிய சொற்பொழிவாவது:—

தோழர்களே, நண்பர்களே! வெள்ளம்போல் திரண்டுள்ள உங்களிடையே தமிழில் பேச இயலாததற்கு நான் அபரிதும் வருந்துகிறேன். அடுத்த மே நாளில் அவசியம் தமிழில் பேசுகிறேன் என்று உறுதி கூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டப்பட்டுள்ள இந்த மாபெருங் கூட்டத்தில், பேச எனக்கு வாய்ப்பளித்ததற்குப் பெரும்மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நான் ஒரு திராவிடனுமல்ல; இன்றைய நிலைமைப்படி முன்னேற்றம் உள்ளவனும் ஆக மாட்டேன்; போர் மூட்டுதல், ஆயிரமாயிரம் மக்களின் ரத்தத்தைக் குடித்தல் முதலாளி வெறி கொண்டு உலக வர்த்தகத்தின் ஏக போகத்தைக் கைப்பற்ற முனைவது, உலக நாடுகளைச் சொந்த நலனுக்காகமார்க்கெட்டுகளாக உபயோகித்துக்கொள்ள எண்ணுவது முன்னேற்றம் என்று கூறப்படுமானால், நான் முன்னேற்றவாதியே ஆக மாட்டேன்.

தயாராகிவிட்டார்கள்

நாம் விரும்புவது என்ன? உலக அமைதி என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும். அதுவே முன்னேற்றத்துக்கு அறிகுறி என்பதாகும். மே தினம் மேதினி மக்களின் வாழ்வில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள். ஆனால் அந்த நன்னாள் முதலாளிகளுக்கு-ஏகாதிபத்ய வெறியர்களுக்கு ஒரு கரி நாள் தான்! முற்போக்கு லண்டன்மாநகரில் மே தின, விழாவுக்குத் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்ற செய்தியைப் படித்தபின் வேறு எந்த முடிவுக்குத் தான் வர முடியும்?

பம்பாய் நகரிலே டல முறை அடியடிக்கு ஆளானவன நான்; ஏகாதிபத்யவெறியை எதிர்த்து நின்றவன்; இதில், நாட்டில் எத்தலைவனுக்கும் நான் தாழ்ந்தவன் இல்லை; ஏகாதிபத்யம் எக்காளமிடுவதையும், நாட்டு மக்கள் நலிவடைவதையும் எடுத்துக் கூற எனக்கு எல்லோரையும்விட அதிக உரிமை உண்டு. கூட்டங்களுக்கு-முன்னேற்றப் பாதையில் வெற்றி கண்ட நாளில் விழாவெடுக்கச் சர்க்கார் தடை உத்திரவு இடுவது என்? பயங்கொள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Phone No 450 — Regd. No. M. 5458
விலை அரை அணா — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (3—5—50) வெளியூர் (4—5—50) [இதழ் 242

அவனியெங்கும் அமைதி காண வாரீர்

—(0)—

போர் வெறியர்கள் சூழ்ச்சியை அம்பலப்படுத்துக!

—(0)—

ரஷியப் படைகளுக்குத் தளபதிகள் அறிவுரை

லண்டன், மே. 1—

சோவியத் யூனியனின் இராணுவ அமைச்சர் தோழர் ஏ. எம். வாசில்ஷ்கி மேதினமாகிய இன்று, தமது படைகளுக்குக் கீழ்க்காணும் செய்தியை விடுத்துள்ளார்:

"நமது தாய்நாட்டின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் வழி கோலுங்கள்"

அமைச்சர் மேலும் பேசுகையில் "அடுத்துவரும் கோடை காலத்தில் நமது படைகளின் பலம் அதிகரிக்கவேண்டும்" என்றார்.

அடுத்தபடியாக பேசிய கடற்படை அமைச்சர் யுமாஷிவ, சோவியத் கடற்படை மேலும் பலம் பொருந்தியதாகவேண்டுமென்றும், கட்டுப்பாடு உடையதாகவும், திறமை உடையதாகவும் ஆக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேநாள்விழாக்கள்: இந்த மே நாள் விழா உலகில் அமைதியான முறையில் கொண்டாடிய நாடுகள் மாஸ்கோவும், கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளுமேயாகும். இங்கு சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களும், கட்சித் தலைவர்களும் படைகளின் அணிவகுப்பைப் பார்வையிடுகின்றனர் தொழிலாளர்களுக்கெல்லாம் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ரஷியாவிலும், மற்ற கம்யூனிச நாடுகளிலும், கீழ்க்கண்ட முழக்கம் கேட்கப்பட்டது 'உலகத் தொழிலாளர்களே! போர் பீதியைக் கிளப்பும் பொல்லாத போர் வெறியர்களை மக்கள் மன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்துங்கள் உலக அமைதிக்குப் பாடுபடுவோருக்கு உங்களுடைய முழு ஆதரவையும் தாருங்கள்" என்பதே அந்த முழக்கங்கள்.

உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டுகள், கருத்துரை கொண்ட விளம்பர அட்டைகளைச் சுமந்தும், அட்லாண்டிக் ஒப்பந்தத்தைக் கண்டிக்கும் ஒலிகளை எழுப்பியும் பவனி வந்தனர். ரஷியாவில் சிகப்பு சதுக்கத்தில் பல வீரர்களும் பொதுமக்களும், அரசாங்க, கட்சித் தலைவர்களும் ஆக லட்சக்கணக்கில் மக்கள் குழுமினர். தோழர் ஸ்டாலின், படை அணிவரிசையைப் பார்வையிட்டார்.

ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, மற்றுமுள்ள மேற்கத்திய நாடுகளில் கம்யூனிஸ்டுகளுக்கும், கம்யூனிஸ்டு அல்லாதார்க்கும் இடையே கைகலப்பு ஏற்படாதிருக்க தக்க பாதுகாப்புகள் செய்யப்பட்டிருந்தன.

சியாங்கேஷேக் மீண்டும் கைவரிசையைக் காட்டுகிறார்

—(0)—

தென்கொரியாவில் தளங்கள் வேண்டுமாம்

—(0)—

மஞ்சூரியாவைத் தாக்கவும் திட்டம் போடுகிறார்

லண்டன், மே 2—

வட சீனா, மஞ்சூரியாவைத் தாக்க வசதியுள்ள விமான கடல் தளங்களைத் தனக்குக் கொடுத்து உதவும்படி தென்கொரியாகுடியரசை, சியாங்கேஷேக் கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

செஞ்சீனாவின் பொருளாதாரத்தை சீர்குலைக்க மஞ்சூரியாவிலுள்ள பவர்ஸ்டேஷன்களையும், வட சீனத் துறைமுகங்களையும் எப்படியும் தாக்க வேண்டுமென்று சியாங்கேஷேக் திட்டம்போட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த யோசனை வாஷிங்டனில் உற்சாகமாக வரவேற்கப்படவில்லை இத்தகைய உதவியை தென்கொரியாசியாங்கிற்கு அளித்தால் தேசிய சீனாவின் விமானங்களும், கப்பல்களும், ரஷ்ய விமானங்களுனும் கப்பல்களுடனும் மோத நேரிடும் என்றும், இதை ஒரு காரணமாகக்கொண்டு ரஷ்யா, சீனப் போரில் நேரில் தலையிடும் என்றும் வாஷிங்டன் அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஜப்பானை வசப்படுத்த ரஷியா முயற்சி

லண்டன், மே 2—

மாஸ்கோ-பீகிங் அச்சில் ஜப்பானையும் சிக்கவைக்க, மஞ்சூரியாவில் இடம்பெற அனுமதியளிக்க ரஷ்யா கூறியிருக்கவேண்டும் என்று, சர்வதேச விவகார பிரிட்டிஷ் ராயல் இன்ஸ்டிடியூட் பத்திரிகையில் பாரோ ஒருவர் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்தான் மஞ்சூரியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஜப்பானிய உதவி அவசியம் வேண்டும் என்பது, ஜப்பானை தன் வசம் செய்வதற்கான முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் 1945-ல் மஞ்சூரியாவின் இழந்த இடத்தைப்பெற ஜப்பான் ஆவலாக இருப்பது சகஜம் என்றும் அவர் கூறுகிறார்.

கம்யூனிஸ்டு வசமில் சீனா சிக்கப்பட மஞ்சூரியாக உதவி கேட்கப்பட்டதோ அதே மாதிரி மஞ்சூரியாவைக் கொண்டே ஜப்பானையும் சிக்கவைக்க கிரெம்ளின் திட்டம் போடுவதாக அவர் கூறுகிறார்.

மாலை மணி

சென்னை 3—5—50 புதன்கிழமை

"கோஷம்!"

சிறைக்குள் 84-ம் நெம்பர் கைதி 85ம் நெம்பர் கைதியைப் பார்த்துச் சொல்லுகிறன்.

'தம்பி, நம் வீட்டுப் பெரியவர் எவ்வளவோ எடுத்துச் சொன்னர், நாணயமாக நட. திருடாதே பொய்சொல்லாதே, என்றெல்லாம். அவ்வுபதேசங்களையெல்லாம் காற்றில் பறக்கவிட்டுத் தீயவழிகளில் நம்மை ஈடுபடுத்தியதாலேயல்லவா இந்தத் துன்பத்துக்காளாகி உள்ளோம்; இனியாவது அவர் உபதேசங்களின்படி நல்வழியில் சென்றுல்தான் நாம் வாழ முடியும் என்று கூறி பெருமூச்சு விடுகிறன். வேலைக்குச் செல்ல வேண்டிய நேரம். 84 ஐயும், 85 ஐயும் காணமல் வார்டர் தேடிக் கொண்டு வருகிறர்.

"போக்கிரிப் பயல்களே! வெளியிலேதான் திருடிவிட்டு உள்ளே வந்திருக்கிறீர்களே. இங்கே வந்தும் உங்கள் திருட்டுப்புத்தி போகவில்லையே. வேலைக்கு ஒழுங்காக வருவதற்கென்ன"/ எனக்கோபிக்கிறர்.

அதற்கு 84ம்நெம்பர் சிறைகுள் வந்து விட்டதாலேயே நாங்கள் திருடர்கள் ஆகிவிடுவோமா? யார் சொன்னது நாங்கள் திருடர்கள் என்று? எப்பேர்ப்பட்ட பெரியவர் வீட்டுப் பிள்ளைகள் தெரியுமா? அநியாயமாக அபாண்டம் பேசாதீர்கள், உங்கள் நாக்கு அழுகிவிடும்!" எனச் சீறுகிறன்

இந்தக் கேலிகூத்தைதோற்கடிக்கும் சம்பவம் மே 1-ந் தேதி சென்னையிலே நடந்திருக்கிறது.

வங்கத்தின் மாஜி பிரதமர் டாக்டர் பி சி. கோஷ் ராஜாஜி மண்டபத்தில் பேசினர்

"தற்போது நாடு அடைந்துள்ள சீர்கேட்டிற்கெல்லாம் காரணம், அந்தக்காலத்திலிருந்தே காந்தியாரின் அறிவுரைகளையும், கொள்கைகளையும் பேச்சளவில் பேசி வந்திருக்கிறோமே தவிர செயலளவில் அவர் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொண்டதில்லை. காந்தீயத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதைப் பற்றி ஆயிரக்கணக்கில் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். காரணம் அவர் உயிரோடு இருந்ததும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவர் விரும்பியதுமேயாகும். ஆனல், நாம் துளிகூட அத்தீர்மானங்களின்படி நடக்கவில்லை. இன்னமும் சொல்லப்போனல், நம் சொல் வேருகவும் செயல் வேருகவும் இருந்தது நாம் அமைத்துக் கொண்ட இம்முரண்பாடுகள் தான் காங்கிரஸ் இவ்வளவு சீர்கேடடைந்ததற்குக் காரணமாகும்! காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு பிரபல காங்கிரஸ் தலைவர், காங்கிரஸ்காரர்கள் காந்தியாருக்குத் துரோகம் செய்து விட்டார்கள். அவர் போதித்த சத்தியம், அஹிம்சை, நாணயம் ஆகிய உபதேசங்களைக் காற்றிலே பறக்க விட்டு விட்டார்கள். அவர் உயிரோடு இருந்தபோது அவர் தாட்சண்யத்திற்காகத் தீர்மானங்களை எழுத்தளவில் நிறைவேற்றினர்களே தவிர, செயலளவில் அவைகளுக்கு நேர்மாருகவே நடந்து வந்திருக்கிருர்கள் என்று. ஆனல் இதே குற்றச்சாட்டை நாம் சொல்லி அவர்களைத் திருத்த முயலும்போது "அடே தேசத்துரோகி! உனக்கு என்ன நெஞ்சழுத்தம் நான் தீய வழியில் நடக்கிறேன், சொல்வேறு செயல் வேருக வாழ்கிறேன் என்றெல்லாம் சொல்ல. உன் நாக்கு அழுகிப் போகும் அபாண்டம் பேசாதே ஜாக்கிரதை" என்றுஇன்றைய காங்கிரஸ் உறுமுகிறது

அதாவது, பெரியவர் சொல் கேளாமல் திருட்டு வழிகளில் ஈடுபட்டுச் சிறைப்பட்ட 84 நெம்பரும் 85-ம் நெம்பரும் வார்டான், 'இன்னுமும் உங்கள் திருட்டுப்புத்தி போகவில்லையே எப்போதுதான் திருந்தப் போகிறீர்கள்?' என்ற கேள்விக்கு; யார் சொன்னது நாங்கள் திருடர்கள் என்று? அபாண்டம் பேசாதே நாக்கு அழுகிவிடும் என்று சொல்லுகிருர்கள்

இதில் இன்னமும் வேடிக்கை என்னவென்றுல், இன்று கோஷ் நேற்று மஜி ராஷ்டிரபதி கிருபளானி மற்ருெருநாள், இந்நாள் ராஷ்டிரபதி பட்டாபி சீத்தாராமய்யா, பட்டேல், நேரு. ஆசாத் ஆகிய அத்தனை காங்கிரஸ் தலைவர்களும் பேசுகிருர்கள். "காந்தீய கொள்கைகளை நாம் காற்றில் பறக்கவிட்டு விட்டோம். தவருன பாதையில் துணிவோடு செல்கிறோம் இது கூடாது" என்று,இந்த 'நாம்" என்பதற்கென்ன அர்த்தமோ?

காந்தீயக் கொள்கைகளைக் காப்பாற்ற வேண்டியவர்கள் யார்? காப்பாற்றும் பொறுப்பை எடுத்துக் கொண்டவர்கள் யார்? காப்பாற்றுகிறோம் என்று உறுதி கொடுத்து, கொடுத்ததாலே சனம்களானது யார்?

இப்போது ஒவ்வொருவரும் நேருவிலிருந்து காமராஜ் வரையிலே காங்கிரஸ்காரர்கள் சரியாக நடந்து கொள்வதில்லை. காந்தியத்துக்குத் துரோகம் செய்கிரார்கள். ஆரம்பத்திலிருந்தே செய்து வந்திருக்கிருர்கள். நாணயம் அற்றனர். சத்தியம் மறந்தனர். ஹிம்சையே செய்கின்றனர்." என்று சொல்லுவதென்றுல் அதன் பொருளென்ன? யார், யாரைப் பார்த்துச் சொல்லுகிருர்கள்? உபதேசம் தேவையோ? இவர்கள் அத்தனை பேரும் உபதேசிகளாக மாறிவிடுவது வேடிக்கைதான்.

இல்லை ஒரு சமயம் ஒவ்வொருவரும் இவ்வுபதேசம் செய்வதன் மூலம்தான் காந்தியாரின் கொள்கைகளின்படி நடப்பதாக மற்றவர்கள் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிருர்களோ என்னமோ. ஒருவர் சொன்னதோடு நின்றிருந்தால், ஒரு வேளை அப்படி நம்பினலும் நம்புவார்கள். அத்தனை பேரும் இதையே 'கோரஸ்'ஸாகப் பாடினல், ஒன்றுதான் நிச்சயமாகத் தெரிகிறது. அத்தனை பேரும் அத்தவறை, அவர்கள் வாசகத்தின்படி மாபெருந்துரோகத்தை காங்கிரஸ் என்று ஸ்தாபனம் ஒன்று அமைத்துக்கொண்டு செய்கிருர்கள் என்பதுதான் வெட்டவெளிச்சமாகிறது

28-ந் தேதி கோவையில் நடந்த ஓர் தேநீர்விருந்திலே மைசூர் காங்கிரஸ் தலைவி தோழியர் தாசப்பா சொல்லியிருக்கிருர் "காங்கிரஸ்காரர்கள் காந்தீயத் தத்துவங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனல் காந்தியாரின் பெயரைத் தங்கள்சொந்த லாபத்துக்கும், பதவி வேட்டைக்கும் பயன் படுத்துகின்றுர்கள்" என்று.

இதே குற்றச் சாட்டைத்தான் மக்கள் இவர்கள் மீது சொல்லிச் சமாதானம் கேட்கும்போது உபதேசிகள், உள்ளம் உருகுவோர், ஆகிய இவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் புனித தன்மைக்கும், காங்கிரஸ்காரர்களின் தியாக சுபாவத்திற்கும் வக்கீல்களாக மாறிவிடுகிருர்கள்.

நல்ல எளிய தமிழிலே இதைத்தான் பித்தலாட்டம் என்று சொல்லப்படுகிறது.

கோவையில் மைசூர் தலைவி திருமதி தாசப்பா காந்தீயத்தைத் காங்கிரஸ்காரர்கள் புரிந்து கொள்ளவில்லை என்கிருர்.

தெரிந்தே துரோகம் செய்கிருர்கள் என்கிருர் டாக்டர் பி. சி. கோஷ்.

அந்தக் கூட்டத்திற்கு,தோழர் செங்கல்வராயன் தலைமை வகித்தார். கோஷின் கோஷத்தைக் கேட்டு செங்கல்வராயன் அவர்கள் கருங்கல்லாய்ச் சமைந்து விட்டார்! அவர்மட்டுமென்ன பெரும்பாலான காங்கிரஸ்காரர்களும் இந்தப் புதுமைப் பித்தலாட்டத்தைக் கண்டு கல்லாய்த்தான் சமைந்துபோயிருக்கிருர்கள்.

இவ்வளவு நல்லவர் போன்று பேசும் தோழர் பி சி. கோஷ் மந்திரியாக இருந்தால் நன்ருக இருக்குமே என்று தோழர்கள் கருதலாம். இவர் மேல்வங்காளத்தின் முன்னுள் முதலமைச்சராக இருந்த வர்தான்!

நாளை!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி என். அண்ணாதுரை அவர்களின் மே தின விழாச் சொற்பொழிவு நாளை வரும்.

அடுத்தவாரம் மூவல்லரசு மாநாடு

தென்கிழக்கு ஆசியாவுக்கு உதவிபற்றி ஆலோசிக்கப்படுமாம்!

லண்டன், மே. 2 —

இங்கு அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் மூவல்லரசு மாநாட்டில் தென்கிழக்கு ஆசியாவுக்குதவி அளிக்கும் விஷயமாக ஆலோசிக்கப்படுமெனத் தெரிகிறது.

இதில் கலந்துகொள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி டீன் அசிஸன் இவ்வாரக் கடைசியாக இங்கு வருகிருர்.

தென்கிழக்கு ஆசியாவுக்கு மொத்தமாக உதவி அளிக்க மார்ஷல் திட்டம்போல் எந்தத்திட்டமும் ஏற்படுத்த அமெரிக்கா உத்தேசிக்கவில்லை என்றும், தனிப்பட்ட நாடுகளின் தேவைகளுக்கேற்ப உதவி அளிப்பதே இப்போதை உத்தேசம் என்றும் 'பைனன்ஷியல் டைம்ஸ்' பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் கூறுகிருர்.

தென்கிழக்கு ஆசியாவிற்கு மார்ஷல் திட்டம்போன்ற ஒரு திட்டம் அனுபவ சாத்யமற்றதென்று வாஷிங்டனில் கருதப்படுகிறதாம். தென் கிழக்கு ஆசியாவுக்கு கூட்டாக என்ன உதவி செய்யலாம் என்பது குறித்து இம்மாநாட்டில் ஒரு முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குநாடுகளில் எந்தநாடுகள், எந்த தென்கிழக்குஆசியநாட்டிற்கு, எந்த முறையில் எவ்வளவு உதவி அளிக்கமுடியும் என்பதுபற்றியும் விவாதிக்கப்படலாம்.

இப்பொழுது நீண்டகால உதவி திட்டம் உத்தேசிக்கப்படவில்லை என்றுலும் பின்னர் அம்மாதிரித் திட்டம் வகுக்கப்படமாட்டாதெனசொல்வதற்கில்லை. இது உருவானல் 10 அல்லது 20 ஆண்டு திட்டமாக இருப்பதுடன் 30 கோடி டாலர் உதவி திட்டமாகவும் இருக்கலாம்

ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கர்களுக்கே

கேப்டவுனில் கிளர்ச்சி!

கேப்டவுன், மே. 1—

"ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கர்களுக்கே" 'சமஉரிமை தாரீர்' என்ற ஒலிகளை எழுப்பிய வண்ணம் 6000 ஆப்பிரிக்கர்களும், சில வெள்ளையர்களும் கலந்த மாபெரும் ஊர்வலம் ஒன்று கேப்டவுன் நகர வீதிகள் வழி சென்றது.

ஆப்பிரிக்கர்கள் கூட்ட இருந்த பொதுக் கூட்டம் ஒன்றுக்கு சர்க்கார் தடை விதித்ததைக் கண்டிக்கவே இவ்வூர்வலம் நடத்தப்பட்டது. கம்யூனிஸ்டுகளே இந்த ஊர்வலத்தை முன்னின்று நடத்தி வைத்தனராம்

மேதினி எங்கும் மேதின விழா!

லண்டன், மே. 2—

மே தினம் உலகெங்கும் மிக அமைதியாகவே கொண்டாடப்பட்டதென இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

பெர்லினில் மட்டும் குழப்பம் ஏற்பட்டு கற்கள் எறிந்ததாகவும் அதிகப்படியான போலீஸ் படைகள் தருவிக்கப்பட்டு கூட்டம் கலைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

மிலனில் எவ்வளவோ போலீஸ் பந்தோபஸ்து ஏற்பட்டிருந்தது. ஆனல் கம்யூனிஸ்டுகளின் ஊர்வலம் மிகவும் அமைதியாகவே நடைபெற்றது.

கோபன்ஹேகன், ஜெ ஹென்னஸ் பாக்கிலும் தொழிலாளர்கள் அமைதியாகவே வேலைக்குத் திரும்பினர் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

ஜெக் பாதிரிகளுக்கு சிறை

வியன்னு, மே. 2—

ஜெக்கோஸ்லேவிகியில் பாதிரிகளுக்கென்றே தனிச் சிறைமுகாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நார்வே கப்பல் மூழ்கியது எப்படி?

இன்ஸ்தான்புல், மே. 2—

நார்வே கப்பல் 'பாஸ்போரஸ்' மூழ்கடிக்கப்பட்டது எப்படி என்பது விஷயமாக துருக்கி அதிகாரிகள் விசாரித்தனர் என்று தெரிகிறது.

டிட்டோ ராணுவ அணிவகுப்பை பார்வையிட்டார்

பெல்கிரேட், மே. 2—

மார்ஷல் டிட்டோ 6000 துருப்புகள் அணிவகுப்பை பார்வையிட்டார். இதற்குப்பின் 250,000 பேர் கொண்ட மக்கள் ஊர்வலம் மே தினத்தை கொண்டாடப்பெற்றது. முன்பெல்லாம் இருந்தபோல், ஸ்டாலின் படங்களை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வது எதுவும் இத்தடவை காணப்படவில்லை.

லண்டன் இந்திய மாணவர்களுக்காக நன்கொடை

லண்டன், மே. 2—

லண்டனிலுள்ள இந்திய மாணவர்களின் ஸ்தாபனத் திற்காக ரூ. 13,000 க்கான செக் ஒன்றை, சவுந்தரமையாராஜா ஹைகமிஷனர் கிருஷ்ணமேனனிடம் அளித்திருக்கிருர்.

திராவிடநாடு ஏஜண்டுத் தோழர்களுக்கு

அறிவிப்பு

7—5—50 முதல், ஒவ்வொரு வாரமும் "திராவிடநாடு" தபால், இரயில் பார்சல்கள் பிரதி வெள்ளிக்கிழமைதோறும்காஞ்சிபுரத்திலிருந்து அனுப்பப்படும். ஏஜண்டுத்தோழர்கள் இவ்வறிக்கையைக் கவனித்து பார்சல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

திராவிட நாடு
மானேஜர்

பிற்போக்குவாதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளித்தனம் என்று தானே கூற வேண்டும். தடை உத்திர விடுவோர், தகாத துப்பாக்கி உபயோகிப்போர், பருகி கொண்ட மந்தப்புத்தியினரே ஆவர். நியாயமான கேள்விக்குத் தக்க பதில் கூற வழியில்லை; அதை மறைக்கத்தான் வெள்ளையனிடமிருந்து விலைக்கு வாங்கிய துப்பாக்கி. முற்போக்குக் கொள்கைகள் உள்ள மக்கள், சுதந்திர வீறு கொண்ட மக்கள் கடைசி போராட்டத்துக்குத் தயாராகி விட்டார்கள்; சழக்கர்களின் சூழ்ச்சி இனி பலிக்காது.

என்ன ஆதாரம்?

எங்கெங்கே தமக்கு ஆதிக்கம் உள்ளதோ, அங்கெல்லாம் மக்களிடையே ஒரு பெரும் பீதி உண்டாக்கி வருகிறார்கள். அவர்கள் கூறுவது சோவியத் ரஷியா உலகப் போர் ஒன்றை ஆரம்பிப்பு எண்ணத்தோடு ஆரம்பிக்கப் போகிறதென்று ஏகாதிபத்ய தாஸர்கள், வெறிபிடித்த முதலாளிகள் நடத்தும் செய்தித்தாள்கள், ஓயாமல் எழுதுகின்றன. ரேடியோக்கள் நம்காதுகள் செவிடாகும்படிக் கத்துகின்றன ரஷியாதான் ஆக்ரமிப்பு எண்ணங்கொண்டுள்ளதென்று ஆங்கிலோ-அமெரிக்க கூட்டு ஏகாதிபத்ய வாதிகள் தான் யுத்த வெறி கொண்டு அலைகிறார்கள். மக்களே இதை உணருங்கள்; குழந்தைகள் போல், கூறுவதையெல்லாம் நம்பி நட்டாற்றில் நிற்க வேண்டாம்! ரஷியா தான் ஆக்ரமிப்பு எண்ணங்கொண்டுள்ளதென்று கூறுவதற்குச் சிறிதும் ஆதாரம் இல்லையே!

அழிவை நாடுகிறது அமெரிக்கா

அமெரிக்கா அணுகுண்டை வெடித்தது. நாகசாகியில் போட்டு நாசம் விளைவித்தது. ஹிரோஷிமா நகரில் போட்டு ஏதும் அறியாத மக்களை நிர்கலங்கவைத்தது. அதுமட்டுமல்ல; என்னிடம் அணுகுண்டு இருக்கிறது அழத்தல குழி தோண்டிப் புதைத்துவிடுவேன் என்று ரஷியாவைப் பயமுறுத்தும் வகையில் பதட்டமாகப் பேசிற்று. அவசரப்படாமல், ஆத்திரப்படாமல், அமைதியாகவே கூறினார் தோழர் ஸ்டாலின், ரஷியாவும் அணுக்குண்டு ரகசியத்தை அறிந்துதான் இருக்கிறது; ஆண்டிரண்டுக்கு முன்னே அதைச் செய்ய ஆரம்பித்து விட்டோமென்று. ஆயாசப்பட்டது அமெரிக்கா, அன்று முதல் இன்றுவரை அயராது முயன்று, ஹைட்ரஜன் குண்டு - அணுக்குண்டைவிட அதிக சக்திவாய்ந்தது கண்டுபிடிக்க முயன்று வாகிறது விழிப்படைந்த விஞ்ஞானிகள், அணுகுண்டைக் கண்டுபிடித்த அறிஞர்கள் கூறுகிறார்கள் குளிர் (பீதி) யுத்தம் உலகத்தில் அதிகரித்துவிட்டதென்று. நாம் இனியும் ஆங்கிலோ-அமெரிக்கக் கூட்டுச் சதியில் சிக்கிச் சீரழியக் கூடாது வெள்ளையன் வழியைப் பின்பற்றினால் பள்ளத்தில் வீழ்வது திண்ணம்.

நாம் தெளிந்த அறிவோடு நடந்துகொள்ளவேண்டும். மக்கள் சமுதாயத்தில் மே நாள், ஒரு ஒப்பற்ற நாள், சுயேச்சையுடன் மக்கள் வாழ அவர்களுக்கு விழி பூட்டிய நன்னாள்.

விளைவு விபரீதமாகும்!

நம்முடைய நாட்டின் பிற்போக்குவாதிகளும், அவர்களுடைய ஏகாதிபத்ய நண்பர்களும், புதிய அரசியலமைப்பைக் கொண்டு, இந்திய மக்களையும், எண்ணிப் பார்க்கும் உலக மக்களையும் ஏமாற்ற முயன்றனர்; ஆனால் அதில் பெருந்தோல்வியடைந்தார்கள் முன்னேற்றப் பாதையில் செல்லும் மக்கள் சமூகங்களும், அறிந்துணரக் கூடிய மற்றையோரும் இந்திய அரசியலமைப்புக்கு அன்றிலிருந்து தம் முழு எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியாவைக் குடியரசாக்கிய அன்று டில்லி நடந்து கொண்ட ஈனத்தனமானசெய்கையை நாம் மறந்துவிடமுடியாது கூடாது. இந்தியா குடியரசாயிற்று, ஆனால் இன்னும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதிதான்; முடிதரித்த மன்னனுக்கு அடிபணிந்துதான் இருக்கிறது இந்தியா. குடியரசு நாளன்று டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை, கட்டாக், காசி நகரங்களிலும், இன்னும் மற்றும் பல முக்கிய நகரங்களிலும் மாபெருங் கூட்டங்கள் நடந்தன. விழாக்கள் கொண்டாட அல்ல, எதிர்ப்பைத் தெரிவிக்க. சர்க்கார் நடத்திய விழாக்களில் மக்கள் கலந்துகொள்ள மறுத்துவிட்டார்கள், விழா ஒரு ஒத்திகை என்பதைக் காட்டவேதான் விழாவின் முடிவு ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லையென்பதைத் தான் காட்டிற்று மக்கள் மதியிழந்துவிடவில்லை, நம்பிக்கையில் நல்லபற்றுதல் உண்டு அவர்களுக்கு. உலக அமைதி சுயேச்சை, சமூக முற்போக்கு ஆகியவைகளே மக்கள் அலைகள் அண்டிப்பிடிக்க முயல்பவை. அந்த அலைகளுக்கு அணை போடுவது இயலாத காரியம் முன்னேற்றத்தைத் தடுத்தவர்களின் கதியை வரலாறு வன்மையுடன் எடுத்துக் காட்டுகிறது. பாதை கரடு முரடாக்கப்பட்டால், விளைவு விபரீதமாகும் இன்று உலக மக்கள் அமைதிக்காகவே வலுவுள்ளவர்களாக இருக்கிறார்கள்,

செஞ்சீனா ஓர் எடுத்துக்காட்டு

இந்தியாவில் அந்நிய முதல் 1948, 49ல் 5 கோடி ரூபாயிலிருந்து 15 கோடியே 69 லட்சத்துக்கு அதிகரித்துள்ளது அந்நிய முதலாளிகளுக்கு அரசியலமைப்பின்படி அளிக்கப்பட்டுள்ள ஆதரவு ஏகாதிபத்தியத்துக்கு எவ்வளவு பயப்படுகிறது இந்திய சர்க்கார் என்பதே தக்க சான்று. அரசியலமைப்பின் 31-வது பிரிவு தொழில் வளர்ச்சியைச் சிறிது சிறிதாக விஷம் கொடுத்து கொலை செய்யும் தன்மையாக இருக்கிறது. மற்றொரு பிரிவின்படி நஷ்டஈடு இல்லாமல் நிலங்களை எடுத்துக்கொள்ளக் கூடாதென்று கூறுகிறது. இந்திய விவசாயிகளின் நிலை நாளுக்கு நாள் சீர்கெட்டுக் கொண்டே வருகிறது. ஏழ்மையின் காரணமாக நாட்டில் சாகுபடி குறைந்து கொண்டே வருகிறது. இதனால் உணவு நிலை மோசமாகிக்கொண்டே வருகிறது. பயங்கரப் பஞ்சத்தின் நிழல் நாட்டின் பல பகுதிகள் வீழ்ந்து கொண்டிருக்கிறது. நிலமற்ற விவசாயிகள் ஆயிரமாயிரமாகப் பெருகிக் கொண்டேவருகிறார்கள் இதைக் களைப்போக்க வழி தான் என்ன? விவசாயத்துறையில் பெரும் புரட்சி ஏற்படுத்தி. உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டும் இதைத் தவிர வேறு வழியே இல்லை இன்று இதுசெய்யப்படாவிட்டால் நாளைக்காவது நடந்தே ஆகவேண்டும், சரித்திரம் கூறுகிறது நமக்கு, செஞ்சீனாவே ஒரு எடுத்துக்காட்டு!

அரசியலமைப்பின் 19-வது பிரிவின்படி பேச்சுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பேச்சுரிமை பறிக்கப்படுவதுடன், நியாயமான கிளர்ச்சிசெய்யும்மக்கள், எலிகளைப்போன்றுசுட்டுத்தள்ளப்படுகிறார்கள், நாய்களாக நடுத்தெருவில் இழுத்து அடிக்கப்படுகிறார்கள்; முன் அறிவிப்பின்றியே கூட்டத்துக்குத் தடைபோடுகிறார்கள். அரசியலமைப்பின் விதிகள் ஆளப்படும் மக்களுக்குக்காக அல்ல, சுரண்டப்படும் பாட்டாளிகளுக்காக அல்ல, பணக்கார முதலாளிகளுக்கு சூழ்ச்சிக்காரர்களுக்குச் செய்யப்பட்டவை என்பவை விளங்கும்.

31-வது பிரிவு......!

இந்திய அரசியலமைப்பின் படி இந்தியாவுக்குப் பெரி பெயர் கொடுக்கப்பட்டுளது. "சுதந்திர ஜனநாயகக் குடியரசு" என்பதுதான் அவர்கள் கொடுத்த பெயர். பெயர்தான் பெரியதாக இருக்கிறதே தவிர, அதனால் மாற்றம் ஏற்படவில்லை இதுவா ஜனநாயகம்? உலகிலுள்ள 'பூஷ்வா' நாடுகளில் முதலாளித்துவ சட்டங்களே உண்டாக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டோர் பல ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கலாம், காடுகள் பல சொந்தமாகக் கொள்ளலாம். பல லட்சம் தொழிலாளர் வேலை செய்யும் தொழிற்சாலைகள், ஒருவனுடைய உரிமையாக இருக்கலாம். இந்த அடிப்படை மனிதனை மனிதன் சுரண்ட செய்யப்பட்ட ஏற்பாடு, மக்களிடையே இரண்டு ஜாதிகளை—ஏழை, பணக்காரர்களைதோற்றுவிக்கும் ஏற்பாடு. பெருவாரியாக உள்ள மக்களின் உயிரைச் சிறிது சிறிதாக ஈர்க்கச் செய்யப்பட்ட சூழ்ச்சியென்றே கூறவேண்டும். இதுபோன்ற நிலை ஏற்படுத்த இந்திய அரசியலமைப்பின் 31-வது பிரிவு வேண்டுமென்றே வஞ்சக நோக்கத்தோடே செய்யப்பட்ட ஒரு சூழ்ச்சி!

அரசியலமைப்பின் 31-வது பகுதியின்படி எந்தத் தொழிற்சாலையும், சொத்தும் சட்டத்தில் திருத்தம் செய்யாமல் பொதுமக்கள் பயனுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. இதைவிட வெட்கப்படக் கூடிய சட்டமே இருக்க முடியாது. பொதுமக்கள் உபயோகத்துக்கு தனிப்பட்டோர் சொத்துக்களை எடுத்துகொள்ளக்கூடாது. தனிப்பட்ட முதலாளிகளை வளம்பெறச் செய்வதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய முக்கிய உற்பத்தி திட்டங்கள் பிரிட்டிஷ் ஏகபோகத்தில் இருக்கிறது. 900 கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில்துறை—டின்—சணல்—தேயிலை—நிலக்கரி உள்ளிட்ட பல முக்கியமான பொருள்களின் உற்பத்தி, விநியோகம் அவர்கள் கையில்!

அன்னிய முதலாளிகளுக்கு அதிக சலுகைகள், அதிலும் அமெரிக்காவுக்கு வழங்கியவைகளுக்கு அளவு கிடையாது. லாபத்தை டாலராக மாற்றி கொள்ள அவர்களுக்கு உரிமை தரப்பட்டுள்ளது. இதைவிட அட்டூழியம் வேறு என்ன செய்யமுடியும்?

எதிர்த்து நிற்போம்

பாக்கிஸ்தானுடைய பிறையும் நட்சத்திரமும் கொண்ட கொடிக்குப் பின்னும், இந்துஸ்தானத்தின் தர்மசக்கரக் கொடியின் பின்னும் பழைய ஏகாதிபத்ய பிரிட்டிஷ் கொடியுடன், கண்ணுக்குத் தெரியாமல் ஒரு கொடி பறக்கிறது அதுதான் நட்சத்திரங்களும் கோடுகளும் உள்ள அமெரிக்கக் கொடி. இந்த மறுக்க முடியாத உண்மையை அறிந்து கொள்ளாத கபோதிகளாக நாம் இருக்கக்கூடாது. தைரியமாக எதிர்த்து நிற்போம் போராடி வெற்றிகாண்போம் ஒரு நாட்டுக்குப் பின்னால் ஒருநாடாக பல நாடுகள் அமெரிக்காவின் கண்ணியில் சிக்கிக்கொண்டு வாடுகின்றன பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் தந்திரத்துக்கு ஒரு வெற்றி, அரபுக்கு விரோதமாக யூதர். இந்துக்கு விரோதமாக முஸ்லிம் சண்டைபோட்டுக்கொண்டு ஒருவர் குரல்வளையை மற்றொருவர் அறுத்தார்கள். 1947-ல் இந்தியாவைத் துண்டாடுவதிலும் அவர்கள் வெற்றி கண்டார்கள்; தொடர்ந்து இந்திய உபகண்டத்தில் இருப்போம் என்று அவர்கள் எண்ணினார்கள் ஆனால் ஏமாந்தார்கள். இந்தியா பாக்கிஸ்தானுக்கிடையே வேற்றுமைகளை வளர்த்து வர்த்தகம் நின்றுவிடும்படி செய்தார்கள். அமெரிக்கப் பத்திரிகைகளெல்லாம் இந்தோ-பாக்கிஸ்தான் வர்த்தகப் போர் என்று கூறினார்கள், வேற்றுமைகளை வளர்த்தார்கள். இருடொமினியன்களிலும் ஏகாதிபத்தியக் கூலிகள் செய்யும் சூழ்ச்சி இருநாடுகளுக்கும் அழிவைத் தேடிக்கொடுப்பதாக இருக்கிறது.

எதுவேண்டும்?

ஏகாதிபத்தியக் கொள்கையை ஒட்டியே இந்தியாவும் நடந்துகொள்வதால் இந்தியா ஆங்கிலோ—அமெரிக்கச் சூழ்ச்சியில் சிக்காமல் தப்பமுடியாதென்ற நிலை ஏற்பட்டுள்ள ஆசியாவில் தோன்றியுள்ள தேசிய சுயேச்சைக் கிளர்ச்சியை அடக்கிவிட இந்தியாவை ஒரு களமாக உபயோகிக்கக்கொள்ள ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்று வருகிறது. இந்திய சர்க்காரும், ராணுவத்திலும் பிரிட்டிஷ் கையாட்கள் உள்ளிருந்து வேலை செய்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

விழிப்புகொண்ட நாம் வேண்டுவது, நமக்கு எது என்பதை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும். உற்பத்தியைப் பெருக்க உபயோகப்படுத்தும் மண்வெட்டியா அல்லது சவக்குழி தோண்டும் மண்வெட்டியா? எது வேண்டும்? மதில்மீது பூனையாக நாம் இருக்கமுடியாது. இருந்தால் அழிவு நம்மை அணைத்துக்கொள்ளும்.

நீ இந்தியாவை நேசிக்கிறாய் நாங்களும் இந்தியாவைநேசிக்கிறோம்; எல்லோரும் இந்தியாவை நேசிக்கிறார்கள்" என்று கூறி தோழர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யா தாம் ஆங்கிலத்தில் இயற்றியிருந்த ஒரு பாடலைப் படித்து தம் சொற்பொழிவை முடித்தார்.

ரஷ்ய-கிழக்குஜெர்மனி ராணுவ உடன்படிக்கை

லண்டன், மே. 1—

ரஷ்யா தனக்கும், கிழக்கு ஜெர்மனிக்குமிடையே ஒரு ராணுவ உடன்படிக்கைசெய்து கொள்ளவும் கிழக்கு ஜெர்மனிக்கும், காமின்பார்ம் நாடுகளுக்கிடையே அனாக்ரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் யோசித்து வருகிறது என்று லண்டன் டெலிகிராப் ராஜதந்திர நிருபர் கூறுகிறார்.

மேற்கு ஜெர்மனியை அட்லண்டிக் உடன்படிக்கை நாடுகளுடன் சேர்த்துக்கொள்வதா என்பது குறித்து, லண்டனில் நடைபெறும் மூவல்லரசு மாநாட்டில் ஆலோசிக்கப்படும் என்று இவர் கூறுகிறார்.

லண்டன் ஆஸ்பத்திரிகளில் திருட்டு

லண்டன், மே. 2—

ஒரு டாக்டராக நடித்து, லண்டன் ஆஸ்பத்திரியிலிருந்து பல மைக்ரோஸ்கோப் கருவிகளை ஒருவன் களவாடிச் சென்றிருக்கிறான்.

தன்மானப் போர்

[டி. எஸ். வேலன்]

வேண்டாத இந்தியினை மீண்டும் காட்டில்
வேண்டுமென்றே புகுத்திவிட்டார் ஆட்சியாளர்

வீம்புடனே கட்டாயம் என்றும் கூறி
வெந்திட்ட புண்ணிலோர் வேல் நுழைக்கும்

வேதனையைத் தாங்குதற்கும் இதயம் உண்டோ?
விந்தைமொழி எங்கள் மொழி என்றே சொன்னோம்

அந்த மொழிக் கடுத்தடுத்தே ஆபத்தென்றும்
சிந்தை நொந்து வாடுதலாற் பயனென் சொல்வீர்?

எனவே,

இந்தி மொழிப் போரல்ல இனிமேல் நம்போர்!
நற்றமிழர் தன்மானம் காக்கும் நற்போர்!

அதுவென்று கொள்ளுதலே ஆண்மை என்போம்

தன்மானம் காக்கநற் றமிழரெல்லாம்
தயங்காது முன்வருக வருக இன்றே!

கழக நடவடிக்கைகள்

இலாரி:—நகர திராவிட முன்னேற்றக் கழக விளம்பர உறுப்பினரும், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினருமான தோழர் அ. சுப்பையா அவர்களது கலைமணி என்ற குழந்தை 22-4-50 அன்று, டையார் மாப்பிள்ளை நடராசன் என்பவர் 27-4-50 ல் காலமானதை முன்னிட்டு வருந்துவதாக டை தோழர் சுப்பையா அவர்களுக்கும், அன்னார் குடும்பத்தாருக்கும் கழகத்தின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

* * *

கொண்டையம்பட்டி:—26 4 50 இரவு தி. மு. க. கிளைக் கழகச் செயலுறுப்பினர்கள் கூட்டம், செயலாளர் தோழர் கு. வீரபத்திரன் தலைமையில் நடந்தது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக் கழகத் துணைச்செயலாளர், நம் கழக விதிகளுக்கு மாறாக நடப்பதால், அன்னாரை டை பதவியிலிருந்து நீக்கப்பட்டது.

2. மே 15 க்குள் நமது இயக்கப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவது

3. உதவிச் செயலாளராக தோழர் அ. இராமலிங்கம் அவர்களை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் சே. வெள்ளைச்சாமி அவர்களின் நீண்ட நேரச் சொற்பொழிவிற்குப்பின் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

மூ. நா. மேட்டுப்பாளையம்:—தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 23-4-50 காலை தோழர் ப. வை. சந்திரப்பன் இல்லத்தில் தோழர் வெ. சீனிவாசன் தலைமையில் கூடியது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1 இதுவரை செயலாளராக இருந்துவந்த தோழர் மா. தம்பராசு அவர்கள் அனுப்பிய ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டு, அவருக்கு பதிலாகத் தோழர் க. து. சுதிரேசன் அவர்களைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது.

2 தோழர் வெ. சீனுவாசன் அவர்கள் கொடுத்த ராஜிநாமாவையும் ஏற்றுக்கொண்டு, அவருக்குப் பதிலாக தோழர் ஆ. மாணிக்கம் அவர்களைச் செயற்குழு உறுப்பினர்களுள் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் சந்திரப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

கோவை:— 25-4-50 ம் தேதி மாலை தி. மு. க. நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. விளம்பர உறுப்பினர் சரிவர வேலை செய்யாததால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தோழர் பி. எம். ஆர். நாதன் அவர்களை வி. உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

பாளையங்கோட்டை:— தி. மு. க. நிர்வாகக்குழுக்கூட்டம் 19-4-50 அன்று கூடியது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

இங்கு கலாசாலைகள் கோடை கால விடுமுறைக்காக மூடப்பட்டிருப்பதால் துவக்கவிழாவை ஜூன் மாதம்வரை ஒத்திப்போடுவது. துவக்கவிழாவிற்கு தோழர் அண்ணாதுரை அவர்களை அழைப்பதென்றும், அதுபோது தலைமைக் காரியாலய கட்டிட நிதிக்காக பணமுடிப்பை அன்னார் வசம் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டம் செயலாளர் நன்றி கூறுதலுடன் இனிது முடிந்தது.

சத்தியமங்கலம்:—28—4—50 அன்று தோழர் எஸ். கே. அமீர் ரைஸ் மில்லத்தில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் எஸ். கே. சென்னியப்பா தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் எஸ். ஜி. கண்ணப்பன் கொண்டு வந்த தீர்மானத்தைத் தோழர் எஸ். ஆர். குமாரசாமி ஆதரித்தப் பேசியபின், ஏகமனதாக கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

1. தலைமைக் காரியாலய கட்டிட நிதிக்கு கழகச்சார்பில் பணம் வசூலித்து அனுப்புவது.

2. மே மாதமு கடைசிக்குள் ஈ. வி. கே. சம்பத் அவர்களை அழைத்து ஓர் பொதுக்கூட்டம் நடத்துவது.

பின்னர் துணைச் செயலாளர் திராவிடன் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

* * *

இருப்பையூரணி:— 27-4-50 காலை இயற்கை எய்திய தோழர் க. கபிரியேல் அவர்களின் பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கும், சுற்றத்தாருக்கும் தி. மு. கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

* * *

இராஜபாளையம்:—தி. மு. க. செயற்குழுக் கூட்டம் வார்டு கட்டிடத்தில் தோழர் பொன்னையா அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது சமதியக்கத் தோழர் சி. மாரிமுத்து நாடார் அவர்கள் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் முடிவுற்றது.

* * *

மேலூர்:—செயற்குழுக் கூட்டம் தோழர் இரா. கண்ணன், அவர்கள் இல்லத்தில் 25—4—50 இரவு 7 தோழர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்தது அதுபோது புதுவாண்டிற்காக செயற்குழுவினைக் கீழ்க் கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

செயலாளர்: தோழர் வை. துரைப்பாண்டி, துணைச்செயலாளர் வேலு, பொருள் உறுப்பினர்-இரா. வேலு, விளம்பர உறுப்பினர் க. முனியாண்டி. மாவட்டப் பிரதிநிதிகள் வை. துரைராஜ் பி. காதர்கனி, மற்றும் பதின்மரை செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மே மாதம் 2-வது வாரத்தில் கழகப் பேச்சாளர்கள் இருவரை அழைத்துக் கூட்டம் நடத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

ஆய்க்கவுண்டன் பாளையம்:— 21—4—50 அன்று மாலை தி. மு. கழக தோழர் எ. க. பழனிச்சாமி அவர்கள் இல்லத்தில் கூடிய செயற்குழுக் கூட்டத்திற்கு தோழர் பெ. மு. இராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கோ. மா. வ. தி. மு. க. விற்கு இக் கிளையின் பிரதிநிதிகளாக தோழர்கள் பெ. மு. இராமசாமி, எ. க. பழனிச்சாமி ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

30—3—50-ல் நடைபெற்ற துவக்க விழாப் பொதுக்கூட்டத்திற்கு வசூல் வரவு ரூ நன்கொடை மூலம் வரவு ரூ. 342-8-0 டை கூட்டத்திற்கு ஆன செலவு ரூபாய் 170-8-0 ம் டை குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

நன்கொடை வசூலில் துவக்க விழா செலவுபோக மீதி இருப்பு ரூ 172-ல் கழக நிதிக்காக சேர்த்து செயலாளர் வசம் ரூ. 86-ம் பொருளாளர் வசம் ரூ 86 ஒப்புவிக்கப்பட்டது. முடிவில் செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

இலங்கையில் கம்யூனிசம் வளருகிறது

லண்டன், மே 2.—

இலங்கையில் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த கம்யூனிஸ்டுகள் திட்டம் போட்டிருப்பதாக இங்கு கிடைத்துள்ள கொழும்பு செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

மாஸ்கோவுக்கும், பீகிங்கிற்கும் சென்றிருந்த இலங்கை கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா இலங்கைக்குத் திரும்பி விட்டார் என்றும், நடவடிக்கைகளைத் தீவிரமாக்கும்படி உத்திரவு பெற்றே இவர் திரும்பியிருக்கவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கும், இலங்கையிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் தொடர்பு இருப்பதாகவே கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

திரிகோணமலை கடற்படைத் தளத்தில் வேலை செய்யும் துறைமுகத் தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்டுகள் தங்கள் செல்வாக்கைப் பரப்ப முயற்சித்து வருகின்றனராம்.

ரஷ்யாவுடன் நேரிடைத் தொடர்பு கொண்ட ஒரு ரேடியோ ஸ்டேஷன், இலங்கையில் இருப்பது சமீபத்தில் வெளியாகியது.

சிங்கப்பூரில் சதித்திட்டம்?

சிங்கப்பூர், மே 2—

சிங்கப்பூரில் எங்கும் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த பெரும் சதி கலகத் திட்டங்கள் தக்க சமயத்தில் போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

கவர்னரைக் கொல்ல செய்யப்பட்ட முயற்சியை யொட்டி, தீவிரமாக சோதனை நடத்தியதில் இத்திட்டம் பற்றிய தகவல் கைப்பற்றப்பட்டது. 9 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கம்யூனிஸ்டுகளின் திட்டப்படி நேற்று மூன்று முக்கியஸ்தர்கள் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டும். சீன வர்த்தக சபைத் தலைவருக்குச் சொந்தமான ரப்பர் எஸ்டேட் தீக்கிரையாக்கப்பட்டிருக்கவேண்டும்.

பிரிட்டிஷ் கப்பலை சியாங் கப்பல் மடக்கியது

ஹாங்காங், மே. 2—

ஹாங்காங் கடலுக்கு அப்பால் வந்துகொண்டிருந்த 'இன்சாரன்' என்ற பிரிட்டிஷ் கப்பலை சியாங்கே ஷேக்கின் யுத்தக் கப்பல் மடக்கியதால், பிரிட்டிஷ் கடற்படை உதவிக்கு விரைந்தோடத் தெரியவருகிறது.

'இன்சாரன்' ஹாங்காங்கை விட்டு போர்ச்சுகீஸிய காலனியால் மாஸ்கோவுக்கு அரிசி சரக்கு ஏற்றப்பட்டு சென்றுகொண்டிருந்தது.

இப்போதே பொதுத் தேர்தல் நடத்துக

ரங்கூன், மே. 2—

கெங்குடு பிரதேசத்தில் இப்பொழுது அமைதி நிலவுவதால், இப்பிரதேசத்தில் உடனே பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று, இப்பிரதேசத்தின் பிரதிநிதிகள் பர்மிய சர்க்காருக்கு கோரிக்கை அனுப்பியிருக்கின்றனர். இது விஷயமாக சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

5-5-50

செய்யூர்:—சி. பி. சிற்றரசு.

6-5-50

புஞ்சைத்தலையூர்:—டி. கே. சீனிவாசன், ஜி. என். ராசு, என். ஈ. பாலகுரு, எஸ் அப்பாவு, ராங்குசம், ஏ. ஆர். சுப்பிரமணியம்.

வக்கீல்கள் கூட்டுறவு சங்கம்

ருமேனியாவில் ஏற்பாடு

லண்டன், மே. 2—

ருமேனியாவில் வக்கீல்கள் யாரும் தனிப்பட்டமுறையில் தொழில் நடத்தக்கூடாது, என்று தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நீதி இலாகா மந்திரியின் நேரிடையான ஆதிக்கத்திற்குட்பட்ட கூட்டுறவு சங்கத்தில் மெம்பராக ஆனால் தான், வக்கீல் தொழில் நடத்த முடியும். இந்த சங்கத்தில் அரசியலில் நம்பிக்கையான பேர்களுக்கே இடமுண்டு.

வக்கீல்கள் எப்போதாவது நிலம் வைத்திருந்தவர்களாக இருந்தாலும் வியாபாரிகள் அல்லது தொழிலாளர்களை வைத்துக்கொண்டு வேலை நடத்தியவர்களாக இருந்தாலும் அவர் வக்கீல் தொழில் நடத்தக்கூடாது என்று உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது. இதனால் மிகத் திறமையான சட்ட நிபுணர்கள் தொழில் செய்ய முடியாது தவிக்கின்றனர்.

தொழில் நடத்த அனுமதிக்கப்பட்ட வக்கீல்களும் தாங்கள் வாங்கும் பணத்தில் ஒரு பகுதியை மட்டுமே தனக்கு எடுத்துக்கொள்ளலாம். பாக்கியை சர்க்காருக்குக் கொடுத்து விடவேண்டும்.

16 வயது மாணவனின் திறமை

சல். எச். ஸ்டெர்ன் பெர்க் என்னும் 16-வயதுள்ள நியூயார்க் நகர மாணவன், அரிய ஆராய்ச்சிகளைச் செய்ததின் பயனாக 2800 டாலர் (சுமார் ரூ 14000) பரிசு பெற்றுள்ளார்.

பல வயது வந்த அமெரிக்க விஞ்ஞானிகளைவிட இந்த மாணவன், நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சி செய்துள்ளனும்

தென் ஆசியாவில் விஞ்ஞான வளர்ச்சி

சென்னை, மே 2—

தென் ஆசியாவில் விஞ்ஞான வளர்ச்சி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது, இன்னும் அபிவிருத்தியடைய என்ன செய்ய வேண்டும் முதலிய விஷயங்களைப் பற்றி ஆலோசித்து, நடவடிக்கை எடுக்க இவ்வருஷ முடிவில் புது டில்லியில் ஒரு மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியத் தேசிய விஞ்ஞான கழகக் கௌன்ஸிலும் யூனெஸ்கோ தென் ஆசிய விஞ்ஞான கார்ப்பரேஷன் காரியாலய ஒத்துழைப்பின் பேரில் இதற்கான முயற்சிகளைச் செய்து வருகிற தென் ஆசியாவின் விஞ்ஞானம் சம்பந்தமான ஒரு முழு தகவல் அடங்கிய வெளியீடு பின்னர் பிரசுரிக்கப்படும்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்வி வசதி

ஷெட்யூல் வகுப்புகள், ஷெட்யூல் குடிகள், இன்னும் இதர பிற்பட்ட வகுப்புகள் ஆகியவைகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்காக உபகாரச் சம்பளம் அளித்துவரும் திட்டத்தை 1950 51-ம் வருஷத்திற்கும் நீடிக்குமாறு இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். மெட்ரிகுலேஷன் கட்டத்துக்கும் மேற்பட்ட கல்வி வசதி உள்ள இந்தியக் கல்வி நிலையங்களில் இந்த உபகாரச் சம்பள மாணவப் பதவிகள் வழங்கப்படும்.

இதற்கான மனு நமூனாக்களையும் விதி விபரங்கள் பற்றிய முழு விபரத் தகவல்களையும் புது டில்லியில் கல்வி மந்திரி சபையின் காரியாலயத்திலுள்ள ஷெட்யூல் வகுப்புகள்-ஷெட்யூல் குடிகள்-இதர பிற்பட்ட வகுப்புகள் மாணவ உதவி சபை காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி 1950 ஜூலை 31 ஆகும்.

குறிப்பு:— இத்திட்டமானது ஷெட்யூல் வகுப்பு மாணவர்களுக்காக மட்டிலும் உரிய ஐந்து வருடத் திட்டமாக ஆண்டொன்றுக்கு 3 லட்சம் ரூபாய் செலவில் வசதியுடன் 1944-45-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1948-49-ல் இத்திட்டம் ஷெட்யூல் குடிகளுக்கும் பிரயோகமாகும்படி விஸ்தரிக்கப்பட்டது; 1949-50-ல் அது இதர பிற்பட்ட வகுப்பினருக்கும் பயன்படும்படி மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

சென்ற வருடத்தில், இத்திட்டத்தின்படி சுமார் 1,400 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன, 1950-51-ம் வருட வரவுசெலவுத் திட்டத்தில் இதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப் படியிருக்கிறது.

ஜெருசலத்தின் எதிர்காலம்

அம்மான், மே, 2—

ஜெருசலத்தின் எதிர்காலம் பற்றி ஜார்டன், இஸ்ரேல் தலைவர்களுடன் கலந்துபேச ஐ. நா. தர்மகர்த்தா கௌன்ஸில் தலைவர் சோஜர் காரிமது இருநாடுகளுக்கு விஜயம் செய்யலாம் என்று, பூரப் பத்திரிகை செய்தி கூறுகின்றது.

ஜெருசலம் சர்வதேச விவகார ஐ. நா.—யூதர் இவர்கள் இருசாராருக்கும் திருப்தியளிக்கும் முறையில் தீர்க்கப்பட முடியாவிடில் மீண்டும் பாலஸ்தீன் இவ்விஷயம் விடப்பட வேண்டும் என்ற தர்ம கௌன்ஸிலிலுள்ள யு. என். பிரதிநிதிகள் யு. எஸ். சர்க்காரைக் கேட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, Muthu Mari Chetty Street Madras-1.